DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 9/2024**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : மாணிக்கம்
Father/ Husband Name : சந்தனத்தேவர்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது வெண்ணியூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த புதன் கிழமை ஆவணி மாதம் இரவு 07.30 மணியளவில் எதிரி வீட்டுக்கு அருகில் மாட்டை தேடிப் போனேன். எதிரியின் வீட்டு வைக்கோலில் மாடு மேய்ந்ததாக சொல்லி கம்பால் தலை, இடது தோள்பட்டை, வலது தோள்பட்டையில் அடித்தார். பிறகு சாட்சிகள் பூசைத்துரை, கலையரசி ஆகியோர் இரத்தத்தை துடைத்து என் மகனுக்கு போன் செய்து சொன்னார்கள்.

2. என் மகன் வந்து என்னை திருவேகம்பத்துார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். பிறகு திருவேகம்பத்துார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் தான் எழுதினார்கள். நானும் எதிரியும் சம்பவத்திறகு முன்பு

பேசிக் கொள்வோமா என்றால் பேசிக் கொள்வோம். திருவேகம்பத்துார் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் சிகிச்சையில் சேர்ந்த அன்றே திரும்பிவிட்டேன் அவர்கள் இருக்க சொன்னார்கள் நான் இருக்கவில்லை. புகாரை நான் சம்பவத்தன்றே காவல் நிலையத்தில் கொடுத்துவிட்டேன்.

2. காவல் நிலையத்தில் என் மருமகள் காவலராக வேலை பார்த்தாரா என்றால் இல்லை, தேவகோட்டை காவல் நிலையத்தில் வேலை பார்த்தார். என் மகன் நீதிமன்றத்தில் வேலை பார்க்கிறார். என்னை மாடு இழுத்து கொண்டு சென்று கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை வைத்துக் கொண்டு முன் விரோதத்தின் காரணமாக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் சொல்வது போல் எதிரி தலை இடது, வலது தோள்பட்டையில் அடிக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று காயச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. கீழே விழுந்த காயத்திற்கு முதலுதவி மட்டும் பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் செல்வம் என் மகன், அண்ணாத்துரை மற்றும் போஸ் மருமகன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 9/2024**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : பூசைத்துரை
Father/ Husband Name : கிருஷ்ணன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது வெண்ணியூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 03.09.2023-ம் தேதி நான் குளியலறையில் இருக்கும் போது வெளியில் சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்த போது மாணிக்கம் பாலு தன்னை அடித்துவிட்டதாக சொல்லி மயக்கம் வருவதாக சொன்னார். எதிரி அடித்ததை நான் பார்க்கவில்லை. நானும் என் மனைவியும் அ.சா.1யை உட்கார வைத்து முகத்தை கழுவி மயக்கத்தை தெளிய வைத்தோம். அ.சா.1 மீண்டும் எதிரியிடம் சண்டைக்கு போக கிளம்பினார். நாங்கள் அவரை தடுத்து வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.